துரிதமான நடவடிக்கை எல்லாப் பகுதிகளிலேயும் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கின்றது. தமிழகம் முழுவதும் புதிய துணை மின்நிலையங்களை அமைக்கின்ற பணிகள் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. அதைப்போலவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற அந்த ஊரிலே துணை மின் நிலையம் அமைக்கின்ற பணிக்கு அனுமதி கொடுக்கப்பட்டு இருக்குமானால்—அதற்கும் குறிப்பிட்ட காலத்தை நாங்கள் நிர்ணயித்து இருக்கிறோம்., அந்தக் காலக்கெடுவிற்குள் முடிப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 209, டாக்டர் பிட்ரிக்ஸ் டி'சோசா. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

209—

சென்னை பட்டினப்பாக்கம் அரசு வாடகைக் குடியிருப்பில் குடியிருக்கும் சொந்த வீடுள்ள ஒதுக்கீடுதாரர்களை வெளியேற்ற நடவடிக்கை

*** 9611**—*டாக்டர் பிட்ரிக்ஸ் டி'சோசா:*

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பட்டினப்பாக்கம் அரசு வாடகைக்குடியிருப்பில் உள்ள ஒதுக்கீடுதாரர்களில் சொந்த வீடோ, அடுக்குமாடி வீடோ இருந்தும் அரசுக் குடியிருப்பில் தொடர்ந்து இருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(ஆ) அப்படிப்பட்டவர்களை வெளியேற்றுவதில் வீட்டு வசதி வாரியம் வெற்றி கண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பல்வேறு நீதிமன்றங்களில் பரிசீலனையில் இருக்கிற வழக்குகளைத் தவிர, மற்றவர்களை வெளியேற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிலர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

DR . BEATRIX D'SOUZA: Hon. Speaker Sir, The Flats, the Middle Income Group Flats at the Foreshore Estate are given out at a very low rent and therefore the occupants are reluctant to leave these Flats even if they build their own houses and these include Government Servants who have got houses in the name of their wives. I understand that many

of these people who have been asked to evict, have taken the matter to Court and have got stay order so that they need not leave the house for another 10 or 12 years. There are very genuine occupants including about three or four widows and these people have now been asked to sign a lease for eleven months. I want to know whether this lease is for the purpose of eventual eviction.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வாடகைக் குடியிருப்பு வீட்டிலே குடியிருப்பவர்கள் சொந்தமாக வீடோ, அல்லது அடுக்குமாடி வீடுகளோ வைத்திருந்தால், அவர்கள் அங்கே குடியிருக்கிற உரிமையினை இழந்துவிடுகிறார்கள். அவை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபின்பு, உடனடியாக அவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதில் சிலர் நீதிமன்றங்களுக்குச் சென்று, நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெறுகிற காரணத்தால் இடைக்காலத்திலே அவர்களை வெளியெற்ற முடியவில்லை. எனினும், வீட்டு வசதி வாரியம் நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கிற வழக்குகளை விரைந்து முடித்து, அவர்களை வெளியேற்ற உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுத்து வருகிறது. அடுத்து தற்போது பொது மக்களுடைய ஒதுக்கீடு என்கிற அடிப்படையிலே ஒதுக்கீடு பெற்றிருக்கிறவர்கள் அதிலே தொடர்ந்து பல ஆண்டுகளாக குடியிருந்து வருகின்ற பழக்கத்தினாலே அதனை மாற்றி அமைப்பதற்காக அவர்களிடத்திலேயிருந்து 11 மாதங்களுக்கு குத்தகை ஒப்பந்தம் எழுதிப் பெறப்படுகிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10.35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 210, திரு. எஸ். ஆசைமணி; மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

210—

நாகப்பட்டினம்–காயிதே மில்லத் மாவட்டத்தில் அரசு அலுவலர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டுதல்

*** 21419—**திரு. எஸ். ஆசைமணி :

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் - காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் பேரூராட்சியில் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்குக் குடியிருப்பு வசதிக்காக வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தந்து உதவிட அரசு ஆவன செய்யுமா?

TRUTH ALONE TRIUMPHS